*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*06 10 2025 6.30*
*திங்கட்கிழமை மாலை*
*மாநிலச் செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

1. சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் மூலம் அனைத்துத் தரப்பினரும் பயனடைந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
2. ஊடகங்களை நசுக்கும் வகையில் திமுக அரசு செயல்படுவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் குற்றம்சாட்டியுள்ளார்.
3. வடகிழக்கு பருவமழைக்கான முன்னேற்பாடுகள் குறித்து முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று சென்னையில் ஆலோசனை மேற்கொண்டார்.
4. பீகார் சட்டப்பேரவைத் தேர்தல் இரண்டு கட்டங்களாக அடுத்த மாதம் 6 மற்றும் 11 ஆம் தேதிகளில் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.
5. உலக ஜூனியர் கலப்புக் குழு பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று நேபாளத்தை வென்றது.

*இனி விரிவான செய்திகள் -----*

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் மூலம் அனைத்துத்தரப்பினரும் பயனடைந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், வரிக் குறைப்பு காரணமாக விற்பனையும் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

>><><><<

தூய எரிசக்தி பயன்பாட்டுக்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியத்தின் நிறுவன தினத்தையொட்டி இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

இயற்கை எரிவாயு தூய்மையானதோடு மட்டுமின்றி குறைந்த செலவிலும் கிடைப்பதாக அவர் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கும் இது உதவிடும் என்று திரு ஹர்தீப் சிங் புரி கூறினார்.

>><><><<

ஊடகங்களை நசுக்கும் வகையில் திமுக அரசு செயல்படுவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் குற்றம்சாட்டியுள்ளார்.

இன்று கோவையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் – முருகன் – 63 செகண்ட்ஸ்)

>><><><<

வடகிழக்கு பருவமழைக்கான முன்னேற்பாடுகள் குறித்து முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று சென்னையில் ஆலோசனை மேற்கொண்டார்.

அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்ற இந்தக் கூட்டத்தில் மழை பாதிப்புகளை தடுப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

>><><><<

தமிழகத்தில் பருவமழைக் கால காய்ச்சல் பாதிப்புதான் உள்ளதாகவும் டெங்கு பரவல் இல்லை என்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு மா சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

இன்று வேலூரில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் – மா சு – 41 செகண்ட்ஸ்)

>><><><<

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 20 ஆயிரத்து 378 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படவுள்ளதாக போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சிவசங்கர் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரும் 16 ஆம் தேதி முதல் 19 ஆம் தேதி வரை சென்னையில் இருந்து பிற ஊர்களுக்கு 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பேருந்துகள் இயக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

இதேபோல் பிற ஊர்களில் இருந்து ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட பேருந்துகள் இயக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

தீபாவளி பண்டிகை முடிந்த பின்னர் பிற ஊர்களில் இருந்து சென்னை திரும்புவதற்கு ஏதுவாக, வரும் 21 ஆம் தேதியிலிருந்து 23 ஆம் தேதி வரை 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பேருந்துகள் இயக்கப்படவுள்ளதாகவும் திரு சிவசங்கர் தெரிவித்தார்.

>><><><<

தமிழகத்தில் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளதாக பிஜேபி குற்றம்சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், திமுக ஆட்சி பொறுப்பேற்றப் பின்னர் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் 15 சதவீதம் அளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>><><><<

பீகார் சட்டப்பேரவை தேர்தல் இரண்டு கட்டங்களாக அடுத்த மாதம் 6 மற்றும் 11 ஆம் தேதிகளில் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இன்று புதுதில்லியில் தலைமைத் தேர்தல் ஆணையர் திரு கியானேஷ் குமார் தேர்தல் அட்டவணையை செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

இதன்படி, முதற்கட்ட தேர்தலுக்கான அடுத்த மாதம் 6 ஆம் தேதி 121 தொகுதிகளிலும், இரண்டாம் கட்டமாக அடுத்த மாதம் 11 ஆம் தேதி 122 தொகுதிகளிலும் வாக்குப்பதிவு நடைபெறும்.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 14 ஆம் தேதி மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதை அடுத்து, பீகார் மாநிலத்தில் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் உடனடியாக அமலுக்கு வந்துள்ளது.

>><><><<

மணிமுத்தாறு அணையில் மீன்பிடி திருவிழா இன்று நடைபெற்றது.

இதில் ஏராளமானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – முருகேசன் – 37 செகண்ட்ஸ்)

>><><><<

நீலகிரி, தர்மபுரி உள்ளிட்ட 8 மாவட்டங்களின் ஒருசில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – செந்தாமரைக்கண்ணன் – 45 செகண்ட்ஸ்)

>><><><<

<u>மாவட்டச் செய்திகள்</u>

பெரம்பலூர் மாவட்டத்தில் நடப்பாண்டில் 10 மண்புழு உரக்கூடாரம் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளதாக ஆட்சியர் திருமதி மிருனாலினி கூறியுள்ளார்.

----------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் திரு பிரசாந்த் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

------------------

கரூர் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து இன்று முதல் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

----------------

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு ஆறாயிரத்து 500 கனஅடியாக அதிகரித்துள்ளது.

----------------

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பெய்த மழை காரணமாக நெற்பயிருக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து வேளாண் துறையினர் ஆய்வு மேற்கொண்டனர்.

----------------

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 489 கிராம ஊராட்சிகளில் கிராம சபை கூட்டம் வரும் 11 ஆம் தேதி நடைபெறும் என்று ஆட்சியர் திருமதி அருணா கூறியுள்ளார்.

------------------

***நாமக்கல் மாவட்டத்தில் அரசின் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.***

***>><><><><<***

***விளையாட்டுச் செய்திகள்***

***உலக பாரா தடகள சாம்பியன் போட்டியில் 6 தங்கம் உள்ளிட்ட 22 பதக்கங்களை வென்ற இந்திய அணியினரின் செயல்பாடு வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.***

***சமூக வலைதளத்தில் இக்கருத்தைப் பதிவு செய்துள்ள அவர், இப்போட்டியை புதுதில்லியில் நடத்தியது இந்தியாவுக்கு கிடைத்த பெருமை என்றும் குறிப்பிட்டுள்ளார்.***

***நூறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் இதில் பங்கேற்றதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.***

***-------------------***

***உலக ஜூனியர் கலப்புக் குழு பேட்மிண்டன் சாம்பியன் போட்டி இன்று குவஹாத்தியில் தொடங்கியது.***

***இந்தியா முதல் போட்டியில் நேபாளத்தை வென்றது.***

***-------------------***

***அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Veer Chotrani காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.***

***>> End of News <<***